**முதன்மை மாவட்ட நீதிமன்றம், புதுக்கோட்டை**

அ.வ.எண்.39/2018

பிரதிவாதி தரப்பு 1வது சாட்சி மீனாட்சி என்பவரின் வாக்குமூலம் இந்திய சாட்சிய சட்டத்தின்படி திருமதி. கங்காலெட்சுமி, கிரேடு-1 பெஞ்ச் க்ளார்க் என்பவரால் சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திருமதி. மீனாட்சி | வயது | : | 24/26 |
| கணவர் பெயர் | : | ரமணா | தாலுகா | : | புதுக்கோட்டை |
| கிராமம் | : | மேட்டுப்பட்டி | தொழில் | : | வீட்டு குடித்தனம் |

நாள்-23.01.2026

பி.வா.சா.1

**<u>1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1) நான் பத்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனது பிறந்த தேதி 16.06.2000.

2) இந்த வழக்கில் எதிருரை தாக்கல் செய்வதற்கு எனது தாயார்தார் வழக்கறிஞருக்கு விபரம் சொன்னார் என்றால் நானும் சொன்னேன்.

3) ஏற்கனவே நான் அ.வ.எண்.14/2012ல் பாகப்பிரிவினைக்காக வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் இந்த வாதிகள் தரப்பினர்கள் இல்லை என்றால் சரிதான்.

4) மேற்படி பாகப்பிரிவினை வழக்கு இந்நீதிமன்றத்தில் 04.12.2013-ல் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. மேற்படி வழக்கு விபரங்கள் எனது தாயாருக்குத்தான் தெரியும்.

5) மேற்படி வழக்கின் தீர்ப்பிற்கு எதிராக மேல்முறையீடு செய்யப்பட்டதா என்ற விபரம் எனக்கு தெரியாது.

6) அந்த வழக்கு போட்ட விபரத்தை மறைத்து இந்த வழக்கில் கட்சி செய்து வருகிறோம் என்று சொன்னால் சரியல்ல.

7) இந்த வழக்கில் எத்தனை அயிட்ட சொத்துக்கள் குறிப்பிடப்பட்டுள்ளது என்ற விபரம் தெரியும். மேற்படி சொத்துக்களின் புல எண்கள் சரியாக ஞாபகம் இல்லை. சர்வே எண், விஸ்தீரணம் எனக்கு தெரியாது. நான்கு எல்கை மட்டும்தான் தெரியும்.

8) இந்த வழக்கில் 1ம் பிரதிவாதி முனியாண்டி என்ன கட்சி செய்கிறார் என்ற விபரம் தெரியும். எங்களுக்கு பாகம் கொடுத்த சொத்தில் 1ம் பிரதிவாதிக்கு பாகம் இருப்பதாக தெரிவிக்கிறார்.

9) என் பாட்டி 23.02.2017 காலமானார். அவர் இறக்கும்போது, எனது தகப்பனார் மற்றும் எனது பெரியப்பா (1ம் பிரதிவாதி) ஆகியோர் வாரிசுகள். எனது பாட்டிக்கு இரண்டு பெண் மகள்களும் உள்ளார்கள். அவர்களும் வாரிசுகள்தான்.

10) வாதிகள்தான் எனது பாட்டியின் மகள்கள்தான் என்றால் வள்ளிக்கண்ணு எனது பாட்டியின் வளர்ப்பு மகள். சரசு எனது பாட்டியின் மகள்.

11) நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் வள்ளிக்கண்ணு வளர்ப்பு மகள் என்று நான் சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன். நான் அவ்வாறு சொல்லவில்லை என்றாலும், தற்போது புதிதாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

மு.மா.நீ,

12) எனது பாட்டி இறக்கும்போது, வழக்கு சொத்துக்கள் எனது பாட்டி காத்தாயி பெயரில்தான் இருந்தது என்றால் எனது தகப்பனார் மற்றும் 1ம் பிரதிவாதியின் பெயரில் இருந்ததாக சொன்னார்கள்.

13) எனது பாட்டி இறக்கும் வரையில் வழக்கு சொத்துக்களை யாருக்கும் எழுதி கொடுக்கவில்லை என்றால் என் அப்பாவிற்கும், பெரியப்பாவிற்கும் எழுதி கொடுத்துள்ளார்.

14) எந்த தேதியில், என்ன ஆவணம் எழுதி கொடுத்தார்கள் என்று எனக்கு தெரியாது. வாய்மொழியாக சொன்ன விபரம் மட்டும்தான் எனக்கு தெரியும்.

15) எனது தந்தை பக்கவாதத்தினால் பாதிக்கப்பட்டதால், ஒரு கால் செயலிழந்து மாற்று திறனாளியாக இருந்தார் என்றால் சரிதான். எனது தாயாருக்கும், தந்தையாருக்கும் தொடர்ந்து எனது தகப்பனாருக்கு கால் சரியில்லை என்ற காரணத்தினால் பிரச்சினை இருந்தது என்றால் பிரச்சினை இருந்தது. ஆனால் கால் சரியில்லை என்ற காரணத்தினால் பிரச்சினை இல்லை.

16) எனது தந்தைக்கு கால் சரியில்லாத காரணத்தினால் என் தாயார் என் தந்தையை விட்டு சென்றுவிட்டார் என்றாலும், அதனால்தான் எனது தகப்பனார் என் தாயாருக்கு விவகாரத்து வழக்கு போட்டார் என்றால் சரியல்ல. வேறு காரணங்கள் சொல்லி விவகாரத்து வழக்கு போட்டார். அந்த விவகாரத்து வழக்கு ஹெச்.எம்.ஓ.பி.எண்.169/2010-ல் எனது தாயார் தொடர்ந்து பலமுறை ஆஜராகவில்லை என்பதால் விவகாரத்து வழங்கப்பட்டது என்றால் சரியல்ல.

17) விவகாரத்து வழக்கில் ஏற்பட்ட ஒருதலைபட்ச தீர்ப்பினை ரத்து செய்ய என் தாயார் மனு செய்த நிலையில், என் தகப்பனார் இறந்துவிட்டதால் அந்த மனு அற்றுபோய்விட்டது என்று சொன்னால் சரியல்ல.

18) எனது தாயாரின் பெற்றோர் வீடு சூரன்விடுதி என்றால் சரிதான். நான் அங்கு ஐந்தாம் வகுப்பிற்கு மேல் பத்தாம் வகுப்பு வரை படித்தேன். என் அம்மாவின் அம்மா வீட்டில் தங்கி படித்தேன். அந்த காலங்களில் என் தாயாரும் சூரன்விடுதியில் எங்களுடன்தான் இருந்தார்.

19) நான் எனது எதிர்வழக்குரையில் நானும், எனது தாயாரும், எனது தகப்பனாருடன் சேர்ந்து வாழ்ந்து வந்தோம் என்று சொல்லியிருப்பது தவறு என்றால் சரியல்ல.

20) நான் 2010-ற்கு முன்பாக எனது தாயார் என் தந்தையாரை விட்டு சென்றுவிட்டு விவாகரத்து வழக்கு நடத்தினார் என்றாலும், என் தகப்பனாரின் இறப்பிற்கு பின்னிட்டு வந்துதான் இந்த வழக்கை நடத்துகிறார் என்றாலும் சரியல்ல.

21) நான் தாக்கல் செய்துள்ள மின்கட்டண ரசீதுகள் எனது தகப்பனார் பெயரில்தான் உள்ளது என்றால் சரிதான். என் தாயார் மற்றும் எனது பெயரில் ஆவணங்கள் இல்லை என்றால் சரிதான்.

22) நானும், எனது தாயாரும் என் தகப்பனாருடன் சேர்ந்து வசித்ததற்கான ஆவணங்கள் உள்ளதா என்றால் உள்ளது. அதை தாக்கல் செய்ய ஆட்சேபணை இல்லை.

23) நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரை பாரா 6-ல், 1ம் பிரதிவாதியின் மனைவிக்கு, எனது தகப்பனாருடன் தொடர்பு இருந்ததை காட்டுவதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. ஆனால் நேரடியாக தெரியும். நான் சொல்வது போல் 1ம் பிரதிவாதியின் மனைவிக்கும் எனது தகப்பனாருக்கும் தொடர்பு இருப்பதாக பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

24) என் தாயார்தான், எனது தகப்பனாருடன் சண்டை போட்டுவிட்டு, சூரன்விடுதி சென்று வேறு ஒருவருடன் சேர்ந்து இருந்துவந்ததால் பஞ்சாயத்து செய்யப்பட்டது என்றாலும், அதனால் இவ்வாறு பொய்யாக குற்றச்சாட்டு சொன்னோம் என்றாலும் சரியல்ல.

25) 2004-ம் ஆண்டு பாகப்பிரிவினை நடைபெற்றது. அப்போது தந்தையின் குடும்பத்திற்கு எவ்வளவு சொத்துக்கள் இருந்தது என்றாலும், எந்தெந்த சொத்துக்கள் யார் யாருக்கு பிரித்துகொடுக்கப்பட்டது என்றால், அந்த நேரத்தில் நான் சிறு பிள்ளையாக இருந்ததால் எனக்கு தெரியாது.

26) 1ம் பிரதிவாதியுடன் சேர்ந்து எனது அப்பா எந்தெந்த சொத்துக்களை விற்று வீண் செலவு செய்தார் என்றாலும், அது எந்த சர்வே எண் என்றாலும், யாருக்கு, எவ்வளவு ரூபாய்க்கு விற்றார் என்பதும் தெரியுமா என்றால் தெரியாது.

27) எனது அப்பா 1ம் பிரதிவாதியுடன் சேர்ந்து சொத்துக்களை விற்றபோது நானும், எனது தாயாரும் என் தகப்பனாருடன் சேர்ந்து வாழவில்லை.

28) என் தகப்பனாரின் மருத்துவ செலவிற்காக அவரால் விற்கப்பட்டதை, தவறான உள்நோக்கத்துடன் தவறாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

29) எனது எதிர்வழக்குரை பாரா 6-ல் சொல்லியுள்ள சம்பவம் எந்த தேதியில் நடந்தது என்று தெரியாது. அதற்கு காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை. ஹெச்.எம்.பி.எண்.169/2010-ல் 26.10.2015ம் தேதி தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டதாக எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் அவ்வாறு சொல்லவில்லை. சேர்ந்து வாழசொல்லி உத்தரவிட்டதாக சொல்லியுள்ளேன். அந்த உத்தரவின் நகல் தாக்கல் செய்ய ஆட்சேபணை இல்லை.

30) எனது சகோதரர் எந்த தேதியில் விபத்தில் இறந்தார் என்ற விபரம் தெரியாது. இழப்பீட்டு தொகை எனது சகோதரருக்கு வந்தது தெரியும். அது எவ்வளவு என்று தெரியாது. அந்த விபரத்தை என் தாயாரிடம் வாங்கி தாக்கல் செய்வதற்கு ஆட்சேபணை இல்லை.

31) நான் எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளதுபோல் அந்த இழப்பீட்டு தொகையிலிருந்து கட்டிடங்கள் கட்டவில்லை என்றாலும், வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

32) காத்தாயி எழுதி கொடுத்ததாக சொல்லப்படும் இனாம் செட்டில்மெண்ட் எந்த தேதியில் எழுதப்பட்டது என்று எனக்கு தெரியாது.

33) அந்த ஆவணத்தை ரத்துசெய்வதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான்.

34) எனது எதிர்வழக்குரை பாரா 9-ல், 1ம் பிரதிவாதி என்னிடமும், எனது தாயாரிடமும் பிரச்சினை செய்ததற்கு புகார் கொடுத்தற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த மாதிரி எவ்வித நிகழ்வும் நடக்கவில்லை என்றர்லும், நான் உள்நோக்கத்தோடு பொய்யாக குற்றச்சாட்டு சொல்கிறேன் என்றால் சரியல்ல.

35) எனது எதிர்வழக்குரை பாரா 10-ல் நான் பல்வேறு ஆவணங்கள் தொடர்பாக குறிப்பிட்டுள்ளேன் என்றாலும், அந்த ஆவணங்கள் எவ்வளவு விஸ்தீரணம் உள்ளது, யாருக்கு விற்கப்பட்டது என்ற விபரத்திற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

36) எனது தகப்பனாருக்கு, எனது தாயார் மனைவி என்ற முறையில் எந்த கடமையும் செய்யாமல் இருந்து வந்தார் என்றாலும், அதனால் எனது தகப்பனார் எனது தாயார் பெயரில் விவாகரத்து வழக்கு போட்டுள்ளார் என்றாலும், அது எனது தகப்பனாருக்கு சாதகமாக தீர்ப்பாகியுள்ளது என்றாலும் சரியல்ல.

37) எனது எதிர்வழக்குரை பாரா 14-ல், எங்கள் நலனுக்காக என் பாட்டி காத்தாயி தாவா சொத்தை தன் பெயரில் எழுதி வாங்கியிருப்பதாக சொல்லியிருப்பது பொய். நானும், எனது தாயாரும் உடல்நிலை சரியில்லாத எனது தந்தையாரை சரியாக கவனித்து வராததால், 1ம் பிரதிவாதியும், எனது பாட்டியும் என் தகப்பனாரை கவனித்து வந்தார்கள் என்றாலும், சொத்தை அபகரிப்பதற்காக உண்மைக்கு மாறாக கட்சி செய்கிறேன் என்றாலும் சரியல்ல. எனது கோரிக்கை தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல.

**மறு விசாரணை - இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

முதன்மை மாவட்ட நீதிபதி,
புதுக்கோட்டை.